காது அலமரும்-செவியிற் சுழலும். காதல் அமரும்-விருப்புடன் றங்கும் பந்து அங்கு உலக்கும் அம் மான்—பந்தை அங்கேயுலக்கின்ற அழகுடைய மாளுகிய உமாதேவி. பந்தம் - பாசம். (௩அ)

பொற்கொடியார் செங்கையினிற் பூம்பழனச் சேற்றளேயிற்
கற்கடக மூருங் கலைசையே—சற்குருவாய்
வந்தவலம் பாற்றினர் வார் சடைமேல் விண்மேனி
வந்தவலம் பாற்றினர் வாழ்வு.

கல் கடகம் ஊரும்-இரத்தினக்கற்கள்பதிக்கப்பெற்ற கங்கணம் ஏறியிருக்கும். கற்கடகம் ஊரும்-ஞெண்டுகள் தவழும். அவலம் பாற்றினர்-மனக்கவலையை நீக்கினர். நிவந்த அலம்பு ஆற்றினர்-உயர்ந்த ஒலிக்கின்றகங்காநதியையுடையவர். (௩௯)

நீர்மண் டிலஞ்சிகளு நீண்டதிருக் கோபுரமுங்
காரண்டந் தோயுங் கலைசையே—வீரநர
பஞ்சா னனத்தான் பதைபதைக்கத் தான்பிளந்த
பஞ்சா னனத்தான் பதி.

இலஞ்சி-தடாகம். காரண்டம் தோயும் - நீர்க்காக்கை மூழ்கும். கார் அண்டம் தோயும்-கரிய ஆகாயத்தைப் பொருந்தும். நரபஞ்சானனத்தான் - நரசிங்க வடிவமானதிருமால். பஞ்சம் ஆனனத்தான்—ஐந்துமுகத்தையுடையவன். பஞ்சானனம் - விரிந்தமுகத்தையுடைய சிங்கம். (௪0)

பொற்பூர் மடந்தையரும் போதகமன் னூர்மார்பும்
கற்பூர நாறுங் கலைசையே—விற்போற்
கரும்புருவ மானூர்தங் காமுறுநர் நெஞ்சிற்
கரும்புருவ மானூர்தங் காப்பு.

கற்பு ஊர நாறும்-கற்பு பரக்கத் தோன்றும். கற்பூரம் நாறும்-கற்பூரம் வாசிக்கும். கரும்புருவம் மானூர் காமுறுநர் நெஞ்சில் - கரியபுருவத்தையுடைய மாதரிடத்து இச்சையுறுதவர் மனத்தில். கரும்பு உருவமானூர் - கரும்புபோல இனியவடிவமாயிருப்பவர். (௪௧)

பல்லுழ்வ ரோரிசட்டும் வாளுழவர் வாம்பரிக்குங்
கல்லணைகள் வைக்குங் கலைசையே—முல்லைநல்லார்
மத்தி னடிக்குமெய்யன் மால்விடையாக் கொண்டவனை
மத்தி னடிக்கு மெய்யன் வாழ்வு.

கரும்புங்கணையைந்தும்பாசாங்குசமுங்கைக்கொண்டடியேன்
திரும்புந்திசைதொறுந்தோற்றுகண்டாயிசைதேக்குமணிச்
சுரும்புண்டகாவியுஞ்சோதிநிலாவுந்துளிருஞ்சற்றே
யரும்புங்கனங்குழலாய்மதுராபுரியம்பிகையே. (௩)

குன்றேயெனுமுலையார்தருங்காதற்கொடுமையெல்லாம்
வென்றேன்மறலியைவிட்டுவிட்டேன்விரைத்தாமரைத்தா
ளொன்றேயென்சென்னிவைத்தாய்பின்னையான்செய்யுமேவலெல்லா
மன்றேயுன்னேவல்கண்டாய்மதுராபுரியம்பிகையே. (௪)

வடிவைத்தவேல்விழியாரநுராகம்பக்கிற்சென்று
குடிவைத்தநெஞ்சென்றுமீளுங்கொல்லோவன்புகொண்டதொண்டர்
முடிவைத்தவாறென்புலைத்தலைமேல்வைத்தமுத்தின்றண்டை
யடிவைத்தபேரின்பமேமதுராபுரியம்பிகையே. (௫)

வடக்குன்றமேருவுமூதண்டமெட்டிவளைந்துபுறங்
கிடக்குங்கடலும்புவனங்களேழுங்கிளர்மருப்புத்
தடக்குஞ்சரமெட்டுமெல்லாந்திருவுந்தித்தாமரையி
லடக்கும்பராசத்தியேமதுராபுரியம்பிகையே. (௬)

ஒளிகொண்டவெண்பிறைத்தோடும்பொன்னோலையுமூறியதேன்
றுளிகொண்டசெங்கனிவாயுமுத்தாரமுந்தோளுமென்றன்
களிகொண்டநெஞ்சங்குடிகொண்டவாவிசைகக்குமணி
யளிகொண்டபூங்குழலாய்மதுராபுரியம்பிகையே. (௭)

மணியுந்தாளமும்வெண்ணகைபோவழிமூவர்செயத்
துணியுந்தொழிலுமுன்செய்தொழிலோபத்தித்துத்திமுடிப்
பணியுஞ்சுடருங்கடலேழுநின்கழற்பங்கயத்தி
லணியுந்திருவுருவேமதுராபுரியம்பிகையே. (௮)

செழுந்துங்கக்கொங்கையுமுத்தாரமும்பொற்சிலம்புந்திங்கட்
கொழுந்துமகரக்குழையுமெல்லாம்வண்டுகொண்டுசுற்றி
யுழுந்துழாய்ப்பைஞ்சூடுந்திருமேனியுமுன்னுடலுமொன்று
யழுந்தும்பராசத்தியேமதுராபுரியம்பிகையே. (௯)

கணையுங்குழையிணைநெடுஞ்சாபமுங்காந்தம்வள்ளைத்
துணையும்பவளமுஞ்சோதிநிலாவுந்துவண்டபச்சைப்
பணையும்பனித்தடங்காந்தளும்பாந்தளும்பத்துமொன்று
யணையுந்திருவுருவேமதுராபுரியம்பிகையே. (௧௦)

இணங்கேனொருவரைநின்னிருதாளன்றியெப்பொழுதும்
வணங்கேனொருவரைவாழ்த்துகிலேன்வஞ்சநெஞ்சருடன்
பிணங்கேனமுதம்பெருகுஞ்செம்பாதிப்பிறைமுடித்த
வணங்கேசரணங்கண்டாய்மதுராபுரியம்பிகையே. (௧௧)

முலைக்கேயவசத்துயர்விளைப்பாரின்பமோகமென்னும்
வலைக்கேயகப்பட்டழுந்திவிடாமல்வலியவந்தென்
றலைக்கேப்பதம்வைத்ததண்ணளியாய்முத்தந்தத்து திரை
யலைக்கேவிழிதுயில்வாய்மதுராபுரியம்பிகையே. (௧௨)

கொடிக்கொண்டசிற்றிடையார்மணிநூபுரங்கொஞ்சமடிப்
பொடிக்கொண்டசென்னியுன்கால்வைக்குமோபுற்றரவெடுத்து
முடிக்கொண்டசொக்கர்பழியாவிரதமுடிக்கவென்றே
யடிக்கொண்டபூண்முலையாய்மதுராபுரியம்பிகையே. (௧௩)

விளையுங்கருக்குழிவீழாமவென்றன்வினைப்பிறவி
களையும்படிக்குக்கருதுகண்டாய்கழுநீரைவென்று
வளையுந்தாளமணித்தோடழுத்தியவள்ளையைச்சென்
றளையுங்கயல்விழியாய்மதுராபுரியம்பிகைகே. (௧௪)

ஊடும்பொழுதுன்கருணைவிடாமலுவப்பதற்குக்
கூடுந்தொழிலைமறப்பதுண்டோநறைக்கொன்றையந்தார்
சூடுந்தலைவர்திருமார்பில்வாரிசொரிதாள
மாடுந்துணைமுலையாய்மதுராபுரியம்பிகையே. (௧௫)

மழைக்கொந்தளகமடவார்தங்காதல்வலைத்தலைப்பட்
டிழைக்குந்துயரமொழிப்பதென்றோவிசண்டுசெல்மணிக்
குழைக்குங்கலந்தபசுமையெலாங்குழையூடோடிக்
தழைக்குங்கயல்விழியாய்மதுராபுரியம்பிகையே. (௧௬)

இணைக்கும்பமென்முலையார்விழிவேலுக்குமெய்யுமதன்
கணைக்குந்தனியிலக்காவிடவோமணிக்கச்சகலாத்
துணைக்கும்பமென்முலையாய்சொக்கர்மேனிதுவளக்கட்டி
யணைக்குங்கமலமுள்ளாய்மதுராபுரியம்பிகையே. (கஎ)

நுங்கேள்வர்பாகத்துமிந்நான்மறையெனுநூலிடத்துங்
கொங்கேய்பொகுட்டுக்கமலாலயத்துங்குடிகொண்டநீ
யெங்கேயிருக்கினுநாயடியேனிக்கிடர்வரும்போ
தங்கேவெளிப்படுவாய்மதுராபுரியம்பிகையே. கஅ)

பொன்னேநவமணியேயமுதேபுவிபூத்தடங்கா
மின்னேயொளியுற்றமெய்ப்பொருளேகருமேதியின்மே
லெந்நேரங்காலன்வந்தாவிவிட்டாலுமெனக்கஞ்சலென்
றந்நேரம்வந்தருள்வாய்மதுராபுரியம்பிகையே. (கசு)

விருந்துண்டுபோகைக்குநாயேன்சடலத்தைவெங்கழுகும்
பருந்துஞ்சுழலுமுன்னேவருவாய்மணப்பந்தலிலே
திருந்துங்கரம்பற்றிநிற்பார்திருமுகச்செவ்வியெல்லா
மருந்துங்கயல்விழியாய்மதுராபுரியம்பிகையே. (உ0)

நாரணன்கொஞ்சும்புகழ்நான்முகற்குப்பொன்னாட்டவற்குங்
காரணங்கொஞ்சுநின்சிற்றடிக்கேதிசைகட்டுமெட்டு
வாரணங்கொஞ்சுங்கடம்பாடவியின்மகிழ்நருட
னாரணங்கொஞ்சுமம்மேமதுராபுரியம்பிகையே. (உக)

நெளிக்கும்புழுவுக்கிடமாங்குரம்பையினின்றுமுயி
ரொளிக்கும்பொழுதுவெளிப்படுவாயொழியாப்பிறவிச்
சுளிக்குங்கடலிற்சுழலாமல்வாழ்வைத்துறந்துபடைத்
தளிக்கும்பராசத்தியேமதுராபுரியம்பிகையே, (உஉ)

ஒழியாப்பனித்தடங்கண்ணீர்சொரியவந்துன்னடிக்கே
பொழியாப்புதுமலரிட்டுநிற்பார்க்குன்பொழிகருணை
விழியாற்சுடப்பவலர்ந்தசெந்தாமரைவீடொன்றவே
யழியாப்பதந்தருவாய்மதுராபுரியம்பிகையே, (உங)

ஏலமடங்குங்குழலார்குற்றேவலிலெய்த்தடியேன்
காலமடங்குமுனேவருவாய்விண்கடந்துநின்ற
கோலமடங்குமறியாதபச்சைக்குழவிஎப்போ
லாலமடங்குமம்மேமதுராபுரியம்பிகையே. (உச)

போர்க்குங்கலாமதியுங்கொன்றைமாலையும்பொன்முடிமேற்
சேர்க்குந்தலைவர்முனைசெல்லுமப்போதுதிரண்டமுத்தின்
வார்க்குங்குமக்கொங்கையானைக்குமுன்னமணமுரச
மார்க்கும்பராசத்தியேமதுராபுரியம்பிகையே. (உரு)

நோக்குங்கருணைவிழியாற்பொதுவறநோக்கியென்னைக்
காக்கும்படிக்குங்கருதுகண்டாயொளிகக்குநிலா
வீக்குஞ்சடாடவியாருண்டகாளவிடத்தையமு
தாக்குஞ்சிவானந்தமேமதுராபுரியம்பிகையே. (உசா)

உலைகுதிக்குந்தழலூறியகானலையுன்னிச்சென்று
கலைகுதிக்கும்படிபோலிளைத்தேன்கழிச்சேல்வெகுண்டு
வலைகுதிக்குஞ்செங்கழுநீருடைந்துவழிந்தசெந்தே
னலைகுதிக்குந்தடஞ்சூழ்மதுராபுரியம்பிகையே. (உஎ)

பொடிபட்டபிட்டுக்குத்தோட்கொண்டுகூடைமண்போட்டுப்பொங்கி
வெடிபட்டவையையடைத்தவங்நாட்சொக்கர்மேனிசுற்றுங்
கொடிபட்டபோதுமுழுநீலக்கோமளமேனியிலு
மடிபட்டதோவணங்கேமதுராபுரியம்பிகையே. (உஅ)

பூண்டகைவாரிப்புதுமலர்தூவிநின்பொன்னடிக்கே
கூண்டகைசென்னிகுவிக்கப்பெற்றேன்பிறைக்கோடணிந்து
நீண்டகைவேழப்பிடரேறிவட்டநிலம்புரக்கு
மாண்டகையேயணங்கேமதுராபுரியம்பிகையே. (உகூ)

கொஞ்சுங்குதலைமின்னார்க்கன்புபூண்டுகுலையுமென்றன்
நெஞ்சுன்பொற்பாதநினைப்பதுண்டோவெண்ணிலாமதிக்கூன்
பிஞ்சுங்கணைவில்லுமங்குசபாசமும்பிஞ்சுமல
ரஞ்சுந்தரித்தவளேமதுராபுரியம்பிகையே. (ங0)

6. மூதண்டம்—பழைய அண்டம்.

8. மணி-பளிங்குமணி. பத்தி-வரிசை. துத்தி-படப்பொறி. பணி-ஈண்டு ஆதிசேடன். சுடர்-சந்திரசூரியர். கட்டேலழு – சூடாமணிநிகண்டு கஉ-ஆவதில் கூகூ-ஆங் கவியிற்காண்க. இம்மூன்றும் அம்பிகை விசுவ ரூபங்கொள்ளுந்திருவுருவிற் கழற்பங்கயத்தின்மட்டாக இருந்தமை குறித்தற்கு அணியுமென்று கூறினர். கழல் - பாதம்.

9. திருமேனியென்றது சிவபிரான்றிருவுருவை.

10. கணை-அம்பு. குமிழ்-குமிழம்பூ. இணை சாபம்—இரண்டுவில். கார் - மேகம். வள்ளைத்துணை - இண்டுவள்ளைக்கொடி. பணை - மூங்கில். பனி - குளிர்ச்சி. பாந்தள் - பாம்பின்படம். கணைமுதலியபத்துள், கணை - கண்ணிற்கும், குமிழ் - நாசிக்கும், சாபம்-புருவத்திற்கும், கார்-கூந்தலுக்கும், வள்ளை - காதிற்கும், பவளம் - அதரத்திற்கும், நிலா-முகத்திற்கும், பணை—தோளிற்கும், காந்தள்—கைக்கும், பாந்தள்-அல்குலுக்கும் உபமானப்பொருள்களாகக்கொள்க.

11. சிவபிரானுக்கு அர்த்தநாரியாயிருப்பதாற் பாதிப்பிறைமுடித்த அணங்கேயென்றுரைன்க.

12. அவசத்துயர் - பாவசத்துன்பம். அலை — கடல். குவ்வுருபெல்லாம் ஈண்டு இடப்பொருளில் வந்தவாறுகாண்க. வகாரம்—அசை. திருமாலும் இவளம்சமே யென்பதற்கு அலைக்கேவிழிதுயில்வாயென்றார்.

13. விரதம்—கல்லாலின்கீழ் யோகியாயிருந்த விரத மென்க.

15. உண்டோ - உளதாமோ? ஓ - வினா. நறை - தேன். வாரி - கடல்.

16. வசல் என்றது செவியை. பசுமை - பொன்னிறம்.

17. என்னைவைத்தாய் என்பது எஞ்சிநின்றது. கமலம் - கையாகிய தாமரை.

18. கொங்கு - வாசனை. பொகுட்டு - தாமரைக்கொட்டை. கமலாலயம் என்பது அன்பரிதயகமலமாகிய ஆலயத்தை.

20. நிற்பார் என்றது சிவபிரானை.

21. அடிக்கு என்பதிலுள்ள குவ்வுருபை ஐயுருபாக்கிப் பொருள்கொள்க. கொஞ்சுதல் ஈண்டு மகிழ்ந்துபேசுங்குறிப்பையுணர்த்திநின்றது. மகிழ்நர் என்றது நாயகராகிய சிவபிரானை. ஆரணம் - வேதம்.

22. குரம்பை - கூடாகியவுடம்பு. ஒளித்தல் - கண்மறைதல்.

23. தாமரை என்றது பாதத்தை.

24. ஏலம் - மயிர்ச்சாந்து. ஆலம் - ஆலிலை. அடங்குதல் - ஒடுங்கியிருத்தல். திருமாலுமிவள் அமிசமேயென்பதறிக.

25. செல்லுமப்போது என்றதைப் பாணிக்கிரகணம் பண்ணச்செல்லும் போதென வருவித்துப் பொருளுரைக்க.

26. பெறுவற-சிறப்பாக. வீக்குதல் - கட்டுதல், ஈண்டணிதல். சடாடவி - சடைக்காடு. காளம்-கருமை. விடத்தையமுதாக்கியவரலாறு - கடலி னின்றெழுந்துவந்தவிடத்தைச் சிவபிரான்கையில்வைத்து அம்பி கையைநோக்கி உன்பார்வையால் இந்நஞ்சு அமுதமாமேயெனக்கூற, அவளங்ஙனமே திருக்கண்ணால்நோக்க, அந்நஞ்சு அமுதமாயிற்று. இதனைக்காஞ்சிப்புராணம், மணிகண்டீச்சரப்படலம் சக, ருo-ஆங் கவியிற் காண்க.

27. உன்னி - நீரென்றுநினைத்து. கலை - மான். சழி - உப்பங்கழி. வலை குதிக்கும் - வலையைநீங்கிக் குதிக்குமென வருவித்துரைக்க.

28. வெடி-ஒலி. சுற்றுதல்-ஈண்டு அர்த்தநாரியாகக் கலந்திருத்தல். முகூ நீலப்போதெனக்கூட்டுக. கோமளமேனி - அம்பிகையினழகுடைய வடிவமென்க.

